# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித் தாளாகப் பதிவு பெற்றது)


எல்லாவற்றிலும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கிறிஸ்துவிற்காகத் துன்புறும் ஆவலைக் கொண்டிருங்கள்.

*   *

எல்லாவற்றிலும் உங்கள் இதயத்தை வெறுமையாக்குங்கள். பின் இறைவனைத் தேடுங்கள். அப்போது அவரைக் கண்டடைவீர்கள்.

*   *   *

இறைவனைக் கொண்டிருப்பவர்களுக்கு குறைவு ஏதுமில்லை. — புனித அவிலா தெரேசா


96-ம் புத். | 1971-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 18-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 34-ம் இல


# இரு குரவர்கள் ஒருங்கே மறைந்தனர்

யாழ்ப்பாண மேற்றிராசன ஆலயத்தில் இத்தகைய ஒரு நிகழ்ச்சி முன்னொருபோதும் நடந்ததுமில்லை, இனிமேலும் நடக்குமோ சொல்லமுடியாது. போரில் வீழ்ந்த வீரர்களைப்போல் தமது குருத்துவக் கவசத்தைப் பூண்டவண்ணம், துயரத்தில் ஆழ்ந்த ஆயிரக் கணக்கான அன்பர்கள் புடைசூழ அக்கம் பக்கமாகக் கிடந்தனர் அவ்விருவரும், மூன்று மேற்றிராணிமாரும், நூற்றுக்கு மேற்பட்ட குரவர்களும், நூற்றுக் கணக்கான கன்னியர்களும், எண்ணற்ற விசுவாசிகளும், பிறரும் அங்கு துக்கங்கொண்டாடக் குழுமியிருந்தனர்.

இறந்த இரு குரவர்களுக்கிடையிலும் பல ஒற்றுமைகளிருந்தன. அவர்களிருவரும் யாழ். சஞ்சுவானியார் கோயிற் பங்கில் பிறந்து வளர்ந்தவர்கள். அவர்களின் வீடுகளுக்கிடையே சிலயார் தூரம் தான் இருக்கும். இருவரும் அப்பகுதியைச் சேர்ந்த பிரசித்தமான, கௌரவமான, செல்வமிக்க, தொன்மையான குடும்பங்களிற் பிறந்தவர்கள். இருவரும் ஒரே கல்லூரியிலும், குருமடத்திலும் கல்வி பயின்றவர்கள். இருவரும் அமலமரியின் தியாகிகள். அவர்களிடையில் பன்னிரண்டு வயது வித்தியாசமிருந்தபோதிலும், தமது சொந்த ஊரிலிருந்து நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் வெவ்வேறு இடங்களில் ஒரே நாளில் காலமாயினர். இருவர் மரணமும் எதிர்பார்க்கப்படாத திடீர் மரணங்கள். 9-9-71 அன்று இருவரும் யாழ்ப்பாணத்தில் அடக்கம் செய்யப்பட்டனர்.

### வண. யோசேவ் நீக்கலஸ் அ. ம. தி.

வயதில் மூத்தவரான நீக்கலஸ் சுவாமியார் 1906 ஆம் ஆண்டு பிறந்தார். 22–12 1930–ல் குருப்பட்டம் பெற்றார். மன்னாரில் உதவிக்குரவராகவும், புனித சவேரியார் கல்லூரி அதிபராகவும், பின்னர் தலைமன்னாரிலும் கடமையாற்றினார். அவர் 1932-இலும், 1940-இலும் அனுராதபுரம் புனித சூசையப்பர் கல்லூரியின் அதிபராகப் பதவியேற்றார். யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த பச்சிலைப் பள்ளி, பாஷையூர், வங்காலை ஆகிய இடங்களில் கட்டளைக் குரவராகப் பணியாற்றிய பின், 1957-ல் சிலாப மேற்றிராசனத்தைச் சேர்ந்தார். பின்பு திரிகோணமலை மேற்றிராசனத்துக்கு மாற்றப்பட்டார். அவர் மரணமான போது பெரிய கல்லாறு பங்கில் கட்டளைக் குரவராயிருந்தார். தேவமாதா பிறந்த திருநாளன்று பூசைப்பலியை நிறைவேற்றி முடித்த தறுவாயில் அவர் மரணமானார்.

வண. நீக்கலஸ் சுவாமியார் உயர்ந்த இலட்சியங்களும், மேலான கொள்கைகளுமுடையவர். தளரா மனவுறுதி படைத்தவர். ஆயினும் கனிவும்சகஜபாவமும் உடையவராய் எல்லோரையும் அன்புடனும், பரிவுடனும் நடத்திவந்தார். தாம்கற்பித்த மாணவர்கள், பங்குமக்களின் ஆன்மீக, இலௌகிகநலனில் அதிக சிரத்தை எடுத்து வந்தார். குருவாகவும், சந்நியாசியாகவும் தமது கடமையைநிறைவேற்றுவதில் அவர் ஏறக்குறைய பூரணத்துவத்தை அடைந்துவிட்டார் என்றே சொல்லலாம்.



வண. ஜே சி. செல்வரத்தினம், அ. ம. தி.

கிறிஸ்ரி சுவாமியார் என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட செல்வரத்தினம் சுவாமியார் 1918-ல் பிறந்து 6-8-1941-ல் பட்டம் பெற்றார். கொழும்பு சஞ்சூசையப்பர் கல்லூரியில் சிறிது காலம் கடமையாற்றியபின், தாம் படித்த கல்லூரியாகிய யாழ்ப்பாண சம்பத்திரிசியார் கல்லூரி நிதி நிர்வாகஸ்தராகப் பொறுப்பேற்றார். விரைவில் கல்லூரி அதிபரான T. M. F. லோங் சுவாமியாரின் வலக்கரமானார். அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து செய்யமுடியாத பல காரியங்களைச் சாதித்தனரென்றும், வேலை கிடைத்தால் புதுமைகளையே செய்தனரென்றும் அவர்களைப் பற்றிக்கூறப்பட்டது. பின்பு இருமுறை, அதாவது 1956-இலிருந்தும், 1966-இலிருந்தும் மடுத் தேவாலயத்தின் பரிபாலகராக இருந்துவந்தார். அவர் இருமுறை பாண்டியந்தாழ்விலும் கட்டளைக் குரவராகப் பணிபுரிந்தார். அவர் மரணமானபோது சுவாமி ஞானப்பிரகாசர் ஸ்தாபித்த நல்லூர் மீசாமில் கட்டளைக் குரவராயிருந்தார்.

செல்வரத்தினம் சுவாமியார் பெருந்திறமை சாலியாயிருந்ததோடு மக்களின் அன்பையும் பெற்றவர். நிர்வாகத் திறமையில் இணையற்றவர். அவர் எப்போதும மகிழ்வும், உற்சாகமும் தளராத நம்பிக்கையுமுடையவர். பலதிறப்பட்ட தன்மைகள் வாய்ந்த இவரிடம் சாமானிய மக்களின் கவர்ச்சிகரமான பேச்சும் நகைச்சுவையும் காணப்பட்டன. அவர் சொற்களை அளந்து பேசுவதில்லை. ஆனால், எவருக்கும் மனக்கசப்பையும் ஏற்படுத்தியதில்லை. பிறர் மட்டில், முக்கியமாக தம் சகோதர குரவர் மட்டில் அவர் கொண்டிருந்த கரிசனையை அநேகர் விரைவில் மறந்துவிட மாட்டார்கள். யாருக்காவது எந்தவிதமான உதவியாவது தேவைப்பட்டபோது, தன்னுடைய சொந்த சௌகரியங்களையும், எச்சரிக்கை செய்வோரின் அபிப்பிராயங்களையும் பொருட்படுத்தாது, மகிழ்ச்சியுடன் தன்னால் ஆனதை யெல்லாம் செய்வார். பிறர் உரிமைக்காகப் போராடுவதில் அவர் பின்வாங்கியதில்லை. சில வருடங்களுக்கு முன் இருதய நோயால் பீடிக்கப்பட்டார் சிறந்த வைத்திய சிகிச்சை பெற்றபோதும், சற்றில் மாதாவின் பிறந்த தினத்தன்று அவர் மரணத்திரையுள் மறையலானார்.

### ஈமச் சடங்குகள்

நீக்கலஸ் சுவாமியார் (மட்டக்களப்பு பெரிய கல்லாறிலும், செல்வரத்தினம் சுவாமியார் கொழும்பிலும் காலமாயினர். அவர்களின் சடலங்கள் அவர்களின் சொந்த ஊராகிய யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டு

(மறுபக்கம் பார்க்க)

## வண. பிதா எஸ். ஏ. ஞானப்பிரகாசம் காலமாயினர்

எதிர்பாராததே நடந்து முடிகிறது. வண. நிக்கலஸ் சுவாமியாரும், வண. செல்வரட்ணம் சுவாமியாரும் இம் மாதம் 8–ந்தேதி காலமாயினார்கள். அவர்களின் நல்லடக்கத்தின்போது இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்ட வண. எஸ்.ஏ. ஞானப்பிரகாசம் சுவாமியார் நாலுநாட்களுக்குள் 12–ந்தேதி திடீரென மரணமானார் என்ற அமங்கல செய்தி அவரை அறிந்த எல்லோரையும் துயர சாகரத்தில் அமிழ்த்திவிட்டது.

ஞானப்பிரகாசம் சுவாமியார் யாழ்ப்பாணம், சந்தியோகுமையோர் கோவில்பங்கைச்சேர்ந்த ஓர் உத்தம கத்தோலிக்க குடும்பத்தில் 28-3-1906 இல் பிறந்து சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயின்றார். மாணாக்கனாக இருக்கும் பொழுது கல்வியிலும், நல்லொழுக்கத்திலும் மற்றைய மாணவர்களுக்கு ஒரு மேல்வரிச் சட்டமாகத் திகழ்ந்தார். கல்லூரிப் படிப்பு முடிந்ததும், தேவ அழைத்தலுக்குச் செவிசாய்த்துக் குருமடம் சேர்ந்து 27-12-32 இல யாழ்ப்பாணம் சந்தியோகுமையோர் ஆலயத்தில் குருத்துவாபிஷேகம் பெற்றார். முல்லைத்தீவு, அனுராதபுரம் பங்குகளில் சிலகாலம் உதவிக் குரவராகத் தொண்டாற்றியபின் 1935 இல் பேசாலைப் பங்குக்குரவராகவும் அடுத்த ஆண்டு அனுராதபுர பங்குக் குரவராகவும் நியமனம் பெற்றார். அவர் பங்குக் குரவராகத் திருத்தொண்டாற்றிய மற்றைய பங்குகள் யாதெனில் செம்பியன்பற்று, மண்டைதீவு (இருமுறை) முல்லைத்தீவு, மாதகல், ஊர்காவற்றுறை, மிருசுவில். காலகதி



யில் உடல்நலம் குன்றிப்போனதால் 1970 இல் ஓய்வுபெற்று யாழ்ப்பாணம் புதுமை மாதா கோவிலில் வசித்து வந்தார்.

சுவாமியார் எந்தெந்தப் பங்குகளில் திருப்பணி புரிந்தாரோ அப்பங்குகள் எல்லாத் துறையிலும் முன்னேற்றம் அடைந்தன. அமைதி, அடக்கம், அறிவு நிறைந்தவர். அவரின் வதனத்தில் என்றும் புன்முறுவல் தவழும். இன்சொல்லாலும் தமக்கு இயல்பாக அமைந்துள்ள சுகுணங்களாலும் எல்லோரையும் தம்பால் கவர்ந்து அனைவரின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றிருந்தவர். தமது குருத்துவ கடமைகளை அணுவேனும் தவறாமல் நடத்திவந்தவர். தமது ஞானமக்களின் நல்வாழ்வையே கண்ணும் கருத்துமாகப் பேணி வந்தவர். சுவிசேஷத்தைக் கவர்ச்சிகரமாகப் பிரசங்கிப்பதில் பெயர் பெற்றவர். என்றாலும் சாந்தமும், தாழ்ச்சியும் நிறைந்த சீவியத்தையே எப்பொழுதும் நடத்தி வந்தார்.

13–ந்தேதி யாழ்ப்பாண ஆசனக் கோவிலிலே காலை 7 மணிக்கு காலஞ்சென்ற குரவருக்காக தந்தை ஆயர் அன்ரனி அடிகள் மற்றும் குருப்பிரசாதிகளுடன் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். மேடை ஆசீர்வதிப்பின் பிறகு சுவாமியாரின் பூதவுடல் மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, கடைசிச் சடங்குகளின் பின் கூடியிருந்த பலநூற்றுக்கணக்கான அன்பர், இனசனர், குருமார், கன்னியர், விசுவாசிகளின் செபங்களோடு நல்லடக்கம் செய்யப்பட்டது.

சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்

# இளைஞர் உலகு

**அன்புச் சோதரரே!**

ஒருமுறை நெப்போலியன் தமது தளபதிகளை விருந்துக்கு அழைத்திருந்தார். குறிப்பிட்ட நேரத்தில் அவர்கள் வராததினால் தனியாக அமர்ந்து உணவருந்த ஆரம்பித்தார். அவர் அருந்தி முடியும்வேளையில் தளபதிகள் ஒருவர்பின் ஒருவராக வந்தனர். சாப்பாட்டு மேசையில் இருந்து எழுந்துகொண்டே, "கனவான்களே! சாப்பிடும்நேரம் முடிந்துவிட்டது. இனி வேலைசெய்யும்நேரம் வந்துவிட்டது; வாருங்கள் ஒருநிமிடமும் வீணாக்காது வேலையில் ஈடுபடுவோம்" என்றார்.

இதிலிருந்து நாம் குறித்த நேரத்தில் குறித்த வேலையைச் செய்ய வேண்டும் அத்தோடு ஒரு நிமிடத்தையும் வீணாக்கக் கூடாது என்பது தெரிகிறதல்லவா? நமது முயற்சிகளில் பூரண வெற்றிக்கும இவைதான் காரணமாகும். எனவே, ஒரு நிமிடத்தையும் வீணாக்காது குறித்த நேரத்தில் குறித்த வேலையைச் செய்து வெற்றி பெறுவோம்.

**சோதரன்.**

# வெற்றிமீது வெற்றிவந்து நம்மைச் சேரும்

இளமைப்பருவம் வெற்றிக்குரிய பருவம். வெற்றி என்பது இலகுவில் அடையக்கூடிய தொன்றல்ல; கிட்டாமல் போவதும அல்ல; நாள்தோறும் சுவீப் டிக்கட் விற்பனை நாம்பார்த்திருக்கிறோம். டிக்கட்டுகள் நாள்தோறும் ஆயிரக்கணக்கில் விற்பனையாகின்றன. ஆனால் எல்லாம் பரிசுக்குரிய டிக்கட்டுகள் அல்ல. டிக்கட் எடுப்பவர்கள் எல்லோரும் பரிசுபெற்று விடுவதும் இல்லை.

நமது முயற்சிகளில் நாம் பெரும்பாலும் தோல்விகளையே பெறுகிறோம். தோல்விகளைக் கண்டு துணிவை இழப்பது கோழைத்தனம். தோல்விகள் எல்லாம் வெற்றியின் தூண்கள் என்பதை நாம் அறிய வேண்டும்.

றொபேட் புறூஸ்என்ற அரசன் தோல்விக்குமேல் தோல்வி யடைந்தபோதும் மனந்தளராது அந்தச் சிலந்தியின் செய்கையைக் கண்டு இறுதியில் வெற்றிபெற்றான் என்பதை நாம் அறிவோம்.

ஓரிரு முறைகளில் ஒருகாரியத்தில் தோல்வி கண்டபின் அதனை முற்றாகக் கைவிடுதல் புத்திசாலித் தனமான செயலாகாது. அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் அல்லவா?

மேலும் நமக்குத் துன்பம் வரும்போது தனித்து வரமாட்டாது. பல துன்பங்கள் சேர்ந்தே வரும. இத்தனை துன்பங்களையும் கண்டு நாம் மனத்தைரியத்தை இழக்கக் கூடாது. மலையே வந்தாலும் நம் தலைதான் சுமக்க வேண்டும் என்ற மனப்பான்மை நமக்கு வேண்டும்.

இத்தகைய மனத்தைரியம் நமக்கு இருந்தால் மட்டும் நமது முயற்சிகள் வெற்றிக்கு மேல் வெற்றியைப் பெற்றுத் தரும். இதனால் நமக்கும், நம் வீட்டுக்கும், நம் நாட்டுக்கும் வெற்றிகள் கிட்டும். வெற்றி மீது வெற்றிகிட்ட நற்பணி புரிவோமாக. இப்பெரும் வெற்றியைப் பெற்றுத்தந்த பெருமை இன்றைய இளைஞராய எம்மையே சாரும்.

—திராட்சை யூரான்

## திரிகடுகம்

**இசை:** மனிதன் இதயத்துக்கு அமைதி தரக்கூடியது இசை ஒன்றே.

**நடனம்:** கலைகள் அனைத்திலும சிறந்தது நடனமே. அறிவுக்கும், ஆரோக்கியத்துக்கும் சிறந்தது.

**நாடகம்:** நாடகம் என்பது மக்கள் இன்பமும், அறிவும் பெறத்தக்கவாறு மனித இயல்பைக் காட்டுவதாக இருக்கவேண்டும்.

## இரு குரவர்களின்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விசுவாசிகளின் மரியாதைக்காக மேற்றிராசன ஆலயத்தில் வைக்கப்பட்டன. ஈமச்சடங்குகள் 9-9-71 அன்று பி. ப. 4-30 மணிக்கு ஆயர் தியோகுப்பிள்ளை, ஆயர் இமெனி, ஆயர் அன்ரனி, பிதா இங்ஸ்லி சுவாம்பிள்ளை, பிதா லூயி பொனையா ஆகியோரால் ஒப்புக்கொடுக்கப்பட்ட கூட்டுப் பூசையுடன் ஆரம்பமாயின. புகழுரை வண. Z. N. குரூஸ் சுவாமியார் அவர்களால் கொடுக்கப்பட்டது. இரு பேழைகளும் ஊர்வலமாக சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதிச் செபங்களுடனும் ஆயர் அன்ரனியின் ஆசீர்வாதத்துடனும் அடக்கம் செய்யப்பட்டன.

**சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக**

# இளைஞர் பணி

கடந்தவாரம் நாம கேட்டதற்கு இணங்கி கொழும்பு செக்கடித்தெரு புனித அன்னம்மாள் ஆலய இசைக்குழுவினர் தமது பணிபற்றித் தெரிவித்துள்ளனர்.

வானொலி கத்தோலிக்க நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு பேச்சு பாட்டு என்பவற்றால் நிகழ்ச்சிகளைச்சிறப்பித்துவருகிறனர். அதிகமான பெண்களே இந்நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு வருவது போற்றத்தக்கது. இவர்களுக்கு இளைஞர் உலகின் பாராட்டுகள்.

ஏனைய இளம் ஆண் பெண்களும் இப்பகுதிக்குத் தம் பணிகளைப் பெற்றார், ஆசிரியர் பங்குக்குரவர் பாதுகாவலர் போன்றவரின் சிபாரிசுடன் அனுப்பிவைக்கவும்.

## மாவடி, புனித சாள்ஸ் வித்தியாலயத்தில் மறை ஆசிரியர் பயிற்சி வகுப்புகள்

### 18-9-71—26-9-71

| நாள்: | நேரம்: | பாடம்: |
|---|---|---|
| 18—9—71 சனி | 3-30 | அப். இயக்கம் |
| ,, | 4-30 | இ. சாத்திரம் |
| 19—9—71 ஞாயிறு | 3-30 | மறை பர இயல் |
| ,, | 4-30 | சமூக இயல் |
| 25—9—71 சனி | 3-30 | தே. தி. அனுமா. |
| ,, | 4-30 | இர. சரித்திரம் |
| 26—9—71 ஞாயிறு | 3-30 | மறை பர. இயல் |
| ,, | 4-30 | சமூக இய. |

# மலையகப் பருவப் பெண்களின் பயிற்சிக் கழகம்

மலையகத்தைத் தாயகமாகக்கொண்டு விண்ணகத்தைத் தம்மகமாக்கத் துடிக்கும் புனித ஊர்சுலா கன்னியரகத்தில் என்றுமில்லாத ஓர் புதஎழுச்சி. அங்குள்ளோர் அனைவரும் வீறுநடைபோட்டு சுறுசுறுப்புடன் எதனையோ ஆவலோடு எதிர்பார்த்து நிற்கும் தன்மை தோன்றியது. ஆவணி 26-ம் நாள் கூடை சுமந்து, மலையகமெல்லாம் ஓடிக் கொழுந்தெடுக்கும பருவப்பெண்கள் ஐம்பத்துமூவர் தம் சுமை நீத்து இக்கன்னியரில்லத்திற்கு கலகலப்புடனும் சுறுசுறுப்புடனும் குழுக்களாக வந்து குவிந்துகொண்டிருந்தனர். காரணம் எதுவாக இருக்கலாம்? இவ்விளம் பெண்களின் நலன்கருதி, இவர்களது சன்மார்க்கநெறி கருதி, இவர்களுக்கு அறிவொளி புகட்ட பதுளை, புனித ஊர்சுலா மடத்தில் ஒரு பயிற்சிக் கழகம் அமைக்கப்பட்டது. இதற்காக ஒரு மாதத்தின் முன்பாக இவர்களுக்கு அழைப்பிதழ்களும் அறிவிப்புகளும் கொடுக்கப்பட்டன.

சகோதர கன்னியரும், பருவக்கன்னிகளும் ஒருமித்து இக்கழகத் திறப்பு விழாவிற்கு பதுளை, தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தை தமிழ்த் தனி மாண்புடன் அலங்காரஞ் செய்தனர். வாழைகள் வாசலில் வரவேற்க, மாவிலைகள் தாலாட்ட, கோலம் மண்டபத்தை அலங்கரிக்க, நிறைகுடங்கள் மேடைக்கு மெருகிடப் பெருமிதத்துடன் காட்சியளித்தது இக்கலைக் கழகம்.

அந்திப்பொழுதில் ஆடம்பர ஆடை அணிந்து ஆயர் லீயோ ஆண்டகையின் வரவை எதிர் நோக்கிப் புன்னகை பூக்க புத்துணர்வுடன் வழிமேல விழிவைத்து நின்றனர் இம்மலையகப் பருவப் பெண்கள். ஆயரின் வரவு கண்டு ஆனந்தம் கொண்டனர். ஆலாத்தி எடுத்தனர், சந்தனப் பொட்டிட்டு, பன்னீர் தெளித்து குத்துவிளக்கேற்றி ஆயரை மண்டபத்தினுள் விட்டுச் சென்று பாமாலை மலர்மாலை என்பன சாற்றி மகிழ்ந்து நின்றனர். ஆயரும் தம் மகிழ்வு தெரிவித்துத் திருப்பலி நிறைவேற்றி இவ்வைபவத்தைச் சிறப்பித்தார்.

இப்பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு ஞான அறிவூட்டப் பிரசங்கங்கள், புத்திமதிகள், தேவதிரவிய அனுமானங்கள் என்பன வழங்கப்பட்டன. உலக அறிவூட்ட வைத்தியர்களின் அறிவுரைகள், படக்காட்சிகள், பலவகையான கலைப்பயிற்சிகள் என்பன இவர்களுக்கு அளிக்கப்பட்டன. குரவர் மூவர், கன்னியர் ஒன்பதின்மர், வைத்தியர்கள் எண்மர் இப்பயிற்சிக் காலத்தில் இவர்களுக்குத் துணைபுரியத் தம் மற்றைய கடமைகளை விடுத்து முன்வந்தனர். பதுளை, ஹுணுகலை, பண்டாரவளை ஆகிய பகுதிகளிலிருந்தே இக்கன்னிப்பெண்கள் கூடியமையால் இவ்விடங்களிலுள்ள பெரியார் தாராள குணத்துடன் எமக்குப் பொருளுதவியும் பண உதவியும் அளித்து நின்றனர்.

கடந்த மூன்று வருடங்களாகத் தொடர்ந்து இம்மலையகப் பருவப்பெண்களுக்கு இப்பயிற்சிக் கழகத்தைத் தொடர்ந்து நடத்தப் பெருமுயற்சி புரிந்தவராகிய புனித ஊர்சுலா மடச் சிரேஷ்ட தாயார் சங். சிஸ். பேர்த்தா அவர்களுக்கும், பங்குக்கட்டளைக் குரவர்களாகக் கடமையாற்றி எம்முடன் ஒத்துழைத்த வண. பிதாக்கள் போல் பெரோரா, றிச்சேட் பெர்னன்டோ, லியானி பெர்னன்டோ அவர்கட்கும் இவ்வருடம் பிரசங்கியாராகக் கடமையாற்றிய வண. விக்ரர் ஞானப்பிரகாசம் அவர்களுக்கும் எம் நன்றி நவில்கிறோம்.

**புனித ஊர்சுலா கன்னியர் மடம், பதுளை.**


## தேவை

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் விவசாய இரசாயனப் பொருட்கள், இயந்திர உதிரிப்பாகங்கள் மோட்டார் வான்மூலம் விநியோகிப்பதற்கு அனுபவமவாய்ந்த ஆட்கள் தேவை. ரொக்கப் பிணை ரூ 5000மும், இரண்டு பொறுப்பாளரின உத்தரவாதமும் வேண்டும். மாதாந்தச் சம்பளம் ரூபா 150. கொம்மிஷனை சேர்த்தால் இத்தொகை ஏறக்குறைய மாதாந்தம்ரூபா 600-க்கு மேலாகும். சம்பந்தப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பக்காரர் விரும்பப்படுவர்

பின்வரும் முகவரிக்கு எழுதுக:—

AUTOS LTD.,
JAFFNA.


# பதவி உயர்வும் இடமாற்றமும்

காவலனின் நீண்டநாள் எழுத்தாளரும், பேச்சாளரும், வானொலி நாடகக் கலைஞரும், சிறந்த சமூக சேவையாளருமான கலைச்சிற்பி திரு. வி. எஸ். பிள்ளை அவர்கள் 1-8-71முதல் முதலாந்தரத் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வுபெற்று 1-9-71 முதல் சிலா – கருக்குப்பனை றோ. க. தமிழ் வித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் கல்கமுவா, றோ. க. த. வித்தியாலயம், மாம்புரி அரசினர் தமிழ் வித்தியாலயம், தேத்தாப்பளை, றோ. க. த. வித்தியாலயம், கறபிட்டி றோ. கத். த. வித்தியாலயம், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வாழைச்சேனை மகா வித்தியாலயம், கோப்பாய் வெளி அரசினர் தமிழ் வித்தியாலயம், நாசுவன்தீவு அரசினர் தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் பலவருடங்கள் சேவைசெய்துள்ளார். இவர் முன்னாள் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க உபதலைவரும், வடமேல் மாகாண தமிழாசிரியர் சங்கச் செயலாளரும், சிலாபம், புத்தளம் வட்டாரக் கத்தோலிக்க தமிழாசிரியர் சங்கச் செயலாளருமாவர்.

கடிதர்: "தமிழன்பன்"

✠

**ஆசிரியர்**
**க. வஸ்தியாம்பிள்ளை**
**அமரத்துவமடைந்த**
## 10ஆம் வருட மரண ஞாபகம்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 14-2-1909 | 21-9-1961 |

**நினைவு நாள்: 21-9-71**

**நினைவஞ்சலி**

**பத்தாண்டு மறைந்தோடி**
**விட்டதையா**
**பால்வடியும்உன்முகம்மறக்கவில்லை**
**எத்தனை ஆண்டுகள் சென்றாலும்**
**எம்மனதைவிட் டகலாய் நீ**
**உத்தமனாய் வாழ்ந்தாய் எம்**
**உயர்வுக்கெல்லாம் வித்தானாய்**
**அத்தனையும்மறந்துவிட நாம்என்ன**
**அறிவற்ற பேதைகளா?**

"சிவியத்தில் இவரை நாம் நேசித்தோம்; நம்முடைய செபங்களால் கர்த்தரின் வீட்டுக்குள் இவரை நாம் இட்டுச் செல்லும்வரை கைவிடாதிருப்போமாக."

இவரது ஆன்ம சாந்திக்காக எதிர்வரும் 22-ந்தேதி புதன்கிழமை காலை 6மணிக்குப் பரிசுத்த அடைக்கலநாயகி ஆலயத்தில் ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

துயருறும்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"ருவிங்கிள் ஸ்ரார்"
நம். 11, மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயத்தின் அனுக்கிரகத்தாலும் ஐந்திகரிய வரம்பெற்ற பியோசுவாமியாரின் மன்றாட்டாலும் பிரிந்திருந்த குடும்பமொன்று ஒன்றுசேர்ந்தது. ஒரு பெண்ணுக்கு நல்வாழ்வு கிடைத்தது. நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கக்காலம் தாமதித்தமைக்காக வருந்துகிறேன்.

ஓர் அடியாள்.

## பெற்றோருக்கு வேண்டுகோள்

1972ஆம் ஆண்டு தைமாதம் 31ஆம் திகதி ஆறுவயது பூர்த்தியான பிள்ளைகளே பாடசாலைகளிலே முதலாம் வகுப்பில் சேர்க்கப்படுவார்கள். அதில் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்கும் பெற்றோர் தங்கள் வீடுகளுக்கு அருகாமையிலுள்ள பாடசாலைகளிலே அனுமதிகோரி விண்ணப்பம்செய்ய வேண்டுமென்று கல்விஅமைச்சு அறிவித்திருக்கிறது. இந்த விண்ணப்பங்கள் ஐப்பசி 7ஆம் திகதி மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். அவைகள் பாடசாலை அதிபர்களுக்கே அனுப்பப்படல் வேண்டும்.

## காணி வழக்கு விசாரணை

காணி உறுதிகள் பற்றிய வழக்குகளை விசாரணை செய்வதில் ஒரு புதிய முறை கையாளப்படவிருக்கிறது. அதாவது எந்தச் சிக்கலான காணி வழக்காய் இருந்தாலும் இரு வருட காலத்துள் விசாரணையை முடித்துவிடுதற்கான வழிவகை வகுக்கப்படவிருக்கிறது. தற்போது காணி வழக்கு ஒன்றின் விசாரணை முடியப் பத்து வருடங்கள்தானும் எடுக்கிறது.

## விமானத் தபாலுறைகள்

விமானத் தபாலுறைகளின் கட்டணம் சில மாதங்களின் முன் 50 சதத்திலிருந்து 80 சதமாக உயர்த்தப்பட்டது. 80 சதம் பெறுமதியான இந்த விமானத்தபாலுறைகள் (ஏரோ கிரும்) விரைவிலே வெளிவரவிருக்கின்றன.

## பௌரணை விடுமுறை நாட்கள்

விடுமுறைச் சட்டத்தின் கீழ் பின்வரும் பௌரணைத் தினங்கள் விடுமுறை நாட்களாகப் பிரகடனஞ் செய்யப்பட்டிருக்கின்றன —1971ஆம் ஆண்டு ஐப்பசி 3. கார்த்திகை 2. மார்கழி 1. மார்கழி 31.

## பெற்றோர் ஆசிரியர் சங்கம்

பாடசாலைகள், மகாவித்தியாலயங்கள், கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் பெற்றோர் ஆசிரியர்சங்கம கட்டாயமாக அமைக்கப்படவேண்டுமென்று தெரிவித்து வித்தியாதிபதிகள், கல்வி அதிகாரிகளுக்கு கல்வி அமைச்சு ஒரு சுற்றுநிருபம் அனுப்பியிருக்கிறது. பல பாடசாலைகள் தரம் குறைந்துபோக முக்கிய காரணம, ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்குமிடையே தொடர்பிலலாதிருப்பதேயென அதில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

## மரவள்ளிச்சீவல்

இலங்கையின் மரவள்ளிச் சீவலை வாங்க மேற்கு ஜேர்மனியிலுள்ள "மெல்ச்சஸ்" என்ற பிரபல கம்பெனி முன்வந்திருக்கிறது. இதுவரைகாலமும் அது தாய்லாந்திலிருந்தே மரவள்ளிச்சீவலை இறக்குமதிசெய்துவந்தது. இதனை உத்தரவாத விலைத்திட்டம் ஒன்றின்கீழ் வாங்க அது விருப்பம் தெரிவித்துள்ளது.

# செய்திகள்

## சோலைவரி குறைக்கப்பட்டது

சோலைவரி அதிகரித்தமையால் யாழ்ப்பாண மாநகர மக்கள் பெரிதும் கஷ்டமடைந்து நெடுநாளாக முறையிடு செய்தமையால் இதுவரை 12½ சதவீதமாயிருந்த சோலைவரியை மாநகரசபையின் நிதிக்குழு 11 சதமாகக் குறைத்துள்ளது. 1972ஆம் ஆண்டு தை மாதத்தில் இது நடைமுறைக்கு வருமெனத் தெரியவருகிறது.

## வள்ளங்கள் திருத்தும் துறை

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு திருகோணமலை, மாத்தறை காலியாகிய மாவட்டங்களிலே சுமார் இரண்டுலட்சம் மீனவர்கள் தங்கள் வள்ளங்கள் பழுதுபோனால் அவைகளைத் திருத்துவதிலே பெரும் கஷ்டமும், காலதாமதமும் ஏற்படுகின்றன. அதனால் அவர்களுக்கு வசதியாக இந்த மாவட்டங்களிலே வள்ளங்கள் திருத்தும் சிறுதுறைகளை அமைக்க மீன்பிடி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது.

## சத்தியக்கடதாசி அவசியம்

1972ஆம் ஆண்டு தைமாதம் பாடசாலைகளிலே தங்கள் பிள்ளைகளை முதலாம் வகுப்பில் சேர்க்குமாறு விண்ணப்பங்கள் அனுப்பும் பெற்றோர் அந்தப் பிள்ளைகள் மற்றெந்தப் பாடசாலையிலும் தற்போது படிப்பதில்லையென்று உறுதிப்படுத்தும் சத்தியக் கடதாசியுடன் அவைகளை அனுப்பவேண்டுமென்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## ரின் மீன் இறக்குமதி

பிற நாடுகளிலிருந்து 'ரின் மீன்' இறக்குமதி செய்வதாலே வருடமொன்றுக்கு ஏழுகோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டுச் செலாவணி விரயமாகிறது. அதனால் அதன் இறக்குமதியைத் தடைசெய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்குப்பதில் உள்நாட்டில் அதிகமான ரின் மீனைத் தயாரிக்கவும், மீன்பிடி தொழிலை ஊக்குவிக்கவும் அது நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

## நவீனமுறை மீன்பிடி பயிற்சி

நவீனமுறைகளிலே மீன் பிடிப்பதில மீனவர்களுக்குப் பயிற்சியளிக்க மீன்பிடிபயிற்சியாளர்கள் கோஷ்டி கோஷ்டியாக நாட்டின் கரையோரப் பகுதிகளுக்கு இம்மாதத்திலே அனுப்பப்படவிருக்கிறார்கள். இதற்கென மீன்பிடி தொழிலில் பயிற்சிபெற்ற 40 பேரை மீன்பிடி அமைச்சு தெரிவுசெய்திருக்கிறது. யந்திர வள்ளங்களை உபயோகித்தல், பழுதுபார்த்தல், பிடிக்கப்பட்ட மீன்களை உப்பிட்டு நெடுநாளைக்குப் பாதுகாத்தல், ஆழ்கடலில்மீன்பிடிப்பதற்குச் சாதகமான இடங்களை கண்டுபிடித்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படும்.

## திறமைகாட்டும் பாடசாலைகள்

கல்வித்தரத்தில் திறமை காண்பிக்கும் பாடசாலைகளுக்கு நற்சாட்சிப்பத்திரங்கள் வழங்கக் கல்வி அமைச்சு திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. அதாவது கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண பரீட்சையிலும் கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தர பரீட்சையிலும்கூடிய சித்திகளைப் பெறும் பாடசாலைகளுக்கு நற்சாட்சிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

## புதியவகைப் பீடிஇலை

பீடி இலைக்குப்பதில் மற்றொரு வகையான இலையைத் தேசிய கூட்டுத்தாபனம் உள்நாட்டிலே கண்டுபிடித்திருக்கிறது. சில காட்டுப்பகுதிகளிலே இந்த இலையைக்கொண்ட செடிகள் காணப்படுகின்றன. இவைகளைப் பாரிய அளவில் பயிரிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் இந்த செடிகளை வளர்க்குமாறு விவசாயிகளுக்கு உதவிகளும், விதைகளும் வழங்கப்படவிருக்கின்றன.

## ஆபத்துச் சமிக்ஞைகள்

ஆபத்துவேளைகளில் மீனவர்கள் கடலில் இருந்து கரைக்கு வானொலிச் சமிக்ஞைகள் அனுப்பக்கூடிய புதிய கருவி வெற்றியளித்திருக்கிறது. கடற்றொழில் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த மின்சார என்ஜினியர் திரு. கெலிக்டஸ் திசநாயக்கா கண்டுபிடித்த இந்த நவீன கருவியைக் கடற்படை, விமானப்படை, பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் பரீட்சித்துப் பார்த்துத் திருப்தியடைந்திருக்கிறார்கள்.

## இரண்டுமாத அவகாசம்

யாழ்ப்பாண மாநகரசபையின் நவீனமார்க்கற் கட்டிட ஒப்பந்தவேலைகள் சென்ற ஆவணிமாதம் 31ஆம் திகதிக்குள் முடிவு பெறவேண்டியன. ஆனால், வேலைகள் தாமதமானமையால் அவைகளை முடிப்பதற்கு இரண்டுமாதகால அவகாசம் மேயரால் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## புதுவகை விதை நெற்கள்

வடபகுதியிலே வரட்சி அதிகமான இடங்களிலும், சதுப்புநிலங்களிலும் நல்ல விளைவைத் தரக்கூடிய நான்கு வகைப் புதிய விதைநெற்கள் தருவிக்கப்பட்டிருக்கின்றன. 'டிக்' வீ i பீ. ஜீ ii; பிணுயூலொட்; எம். ஐ. 273 ஆகிய நான்கு இனநெற்களும் ஒவ்வொன்றும் இரண்டு ரூத்தல் கொண்ட பைக்கெற்றுகளாகவும், அவற்றிற்குத் தேவைப்படும இருவகைப் பசளைகள் மூன்று ரூத்தல் கொண்ட பைக்கெற்றுகளாகவும் விற்பனைசெய்யப்படுகின்றன.

## எப்போது அனுமதி கிடையாது

அடுத்தவருடம் தைமாதம் 31ஆம் திகதிக்குப்பின் ஆறுவயது பூர்த்தியடையும். அதாவது அடுத்த மாசிமாதத்திலே ஆறுவயது பூர்த்தியடையும் எந்தப்பிள்ளையும் இடைநடுவிலே பாடசாலைகளில் சேர்க்கப்படமாட்டார்களென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## தரிசு நிலக் குத்தகை

நாடுமுழுவதிலும் ஆங்காங்கு தரிசாகக் கிடக்கும் நிலங்களை அவற்றின் சொந்தக்காரரிடம் குத்தகைக்கு வாங்கி விவசாயத்திற்குப் பயன்படுத்தக் காணி-விவசாய அமைச்சு முடிவுசெய்திருக்கிறது. இத்தக்காணிகளுக்குக் குறிக்கப்படும் குத்தகைப்பணம் வருடந்தோறும் அவற்றின் சொந்தக்காரருக்கு வழங்கப்படும்; இந்த நிலங்களை நட்டஈடு எதுவுமின்றிச் சுவீகரிப்பதென்று முன்னர் அது செய்தமுடிவு இப்பொழுது மாற்றப்பட்டிருக்கிறது.

## முப்பது கோடி ரூபா கடன்

ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிப பொறுப்பைக் கையேற்றபொழுது. வெளிநாட்டுக் கடனாக 90கோடியே 20லட்சம ரூபாவைச் செலுத்த வேண்டியிருந்தது. இதிலே கடந்த ஒரு வருட காலத்திலும் 30கோடி ரூபாவை அது திரும்பச் செலுத்தியிருக்கிறது. தேவையற்ற பொருள்களின் இறக்குமதிகளைக் குறைத்தே இந்தப் பணம் மிச்சம் பிடித்துத் திரும்பச் செலுத்தப்பட்டுள்ளது.

## பாடசாலை பேக்கறிகள்

பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் பணிஸ்களைத் தயாரிப்பதற்கென்று சுமார் 200 பேக்கறிகளை அமைத்து நடத்தக் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. இவைகளைக் கொண்டு நடத்துவதற்குவேண்டிய ஆட்கள் விரைவிலே நியமிக்கப்படவிருக்கிறார்கள். அமெரிக்க கெயர் ஸ்தாபனம் நன்கொடையாக வழங்கும் மாவிலிருந்தே பணிஸ்கள் தயாரிக்கப்படும்.

## மாதிரிக் கனிஷ்ட பாடசாலை

வடமாகாணத்திலே நல்லூர், கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை, காங்கேசன்துறை, உடுவில், வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய வடமாகாணத்தின் 13 தொகுதிகளிலும் 13மாதிரிக் கனிஷ்ட பாடசாலைகளை அமைக்கக் கல்வி அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இப்பாடசாலைகள அந்தந்தத் தொகுதி எம். பி. களின் சிபாரிசின் பேரிலே தெரிவு செய்யப்பட்டு வருகிறது. இவைகள் வருகிற தைமாதத்தில் ஆரம்பமாகும். எந்த ஒரு பிரதான பட்டணத்துக்கும், அருகாமையில் இல்லாத இவைகள் அமைக்கப்படும். இவற்றின் ஆசிரியர்கள் ஆசிரிய பயிற்சி பெற்றவர்களாய் இருப்பார்கள்.

## மேலதிக ஆசிரியர்கள்

அதிபர்களும், தலைமைஆசிரியர்களும் தங்கள் பாடசாலைகளில் தேவைக்கு மேலதிகமாக ஆசிரியர்களைக் கொண்டிருந்தால் அவர்களின் சம்பளத்திலிருந்து அறவிட்டு அந்த மேலதிக ஆசிரியர்களுக்குக் கொடுபடவிருக்கிறது. சகல பாடசாலைகளிலும் தேவைப்படும்ஆசிரியர்களை நியமித்துச் சகல மாணவர்களுக்கும் கல்வி வசதி அளிக்குமுகமாகவே கல்வி அமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது. அதனால் தேவைக்கு அதிகமாகத் தங்கள் பாடசாலைகளில் இருக்கும் ஆசிரியர்களின் விபரங்களை அவர்கள் அந்தந்தப்பகுதிக் கல்வி அலுவலகங்களுக்குத் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

## இலவச மதிய உணவு

9-ஆம் வகுப்புவரை கட்டாயக்கல்வி நடைமுறைக்கு வரவிருப்பதால் பாடசாலை செல்லும் மாணவர்கள் சகலருக்கும் பாடசாலைகளிலே மத்தியான உணவை இலவசமாக வழங்கக் கல்விமந்திரி தீர்மானித்திருக்கிறார். அடுத்த தைமாதமுதல் நடைமுறைக்கு வரவிருக்கும் இத்திட்டத்தினால் அரசாங்கத்துக்கு ஆண்டுதோறும் ஐந்து கோடி ரூபா செலவாகுமெனத் தெரியவருகிறது. முதலாம் வகுப்பு முதல் ஆறும் வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்குப் பணிஸ், 'பிஷ்ரோல' எனப்படும் மீன் உருண்டை ஆகியனவும் மேல் வகுப்பு மாணவர்களுக்கு அவித்த கடலையும வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. உலக சுகாதாரஸ்தாபனமும் ஐக்கிய நாடுகளின் சிறுவர்கள் நிதிஸ்தாபனமும் இதற்கு உதவி செய்யவிருக்கின்றன.

## ஒப்படைத்த துப்பாக்கிகள்

அரசாங்கத்திடம் தங்கள் துப்பாக்கிகளை ஒப்படைத்தவர்கள் அவைகளை மீண்டும் பெறவேண்டுமானால் இம்மாதம் 6ஆம் திகதிக்குப்பின் கச்சேரிகளிலும், காரியாதிகாரிகளின் அலுவலகங்களிலும் கிடைக்கும் விண்ணப்ப படிவங்களை நிரப்பிப் பொலிஸ் நிலையப் பொறுப்பாளருக்குப் பதிவு தபாலில் அனுப்பிவைக்கவேண்டும். பரிசோதனையின் பின் துப்பாக்கிகள் அவற்றின் உரிமையாளருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். அப்பொழுது அவைகளைத் தங்கள் பாதுகாப்பில் வைத்திருப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்கென்று சத்தியம் ஒன்றை அரசாங்க அதிபருக்கு அவர்கள் எழுதிக் கொடுக்கவேண்டும்.

## உழைக்கும்போது வருமானவரி

உழைக்கும்பொழுதே வருமானவரியை அறவிடும் புதிய திட்டம் வருகிற ஐப்பசிமாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும். அதனால் ஐப்பசிமாத வருமானவரி அந்த மாதத்திலேயே கழித்தெடுக்கப்படும். மாதந்தோறும் இந்தக்கழிவு தொடர்ந்து செய்யப்பட்டுச் சேவை காலம் முடியும்போது தான வரி அறவிடுதல் நிறுத்தப்படும்.

### தலையங்கம்

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதிபெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், அவ்வதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது கஷ்டமாயிருப்பதாலும் சிலவாரங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## சத்தியவேத பாதுகாவலன்

# இலௌகிக நன்மைகள்

சிறு குழந்தைகளை ஆலயத்துக்கு அழைத்துச் செல்லும் தாய்மார் அவர்களைச் செபிக்கும்படி வற்புறுத்துவதை அடிக்கடி கேட்டிருக்கிறோம், "மாதாவே, எனக்கு சுகத்தைத் தாரும்," "யேசுவே, எனக்கு படிப்பைத் தாரும்," என்பது போன்ற தோரணையிலே இச்செபம் பெரும்பாலும் அமைந்திருப்பதைக் காணலாம். "யேசுவே, நான் உம்மை நேசிக்கிறேன்" என்று சொல்லிக் கொடுக்கும் தாய்மார் அபூர்வம். எனவே, ஏதோ இலௌகிக நன்மையைப் பெறுவதுதான் செபத்தின் முக்கிய நோக்கம்போல் தோன்றுகிறது. ஆனால், இது குழந்தைத் தனமானது. இறைவனின் நன்மைத் தனத்தையும் அவரது பெருமையையும உணராத சிறுவர் தமது சொந்தத் தேவைகளை மட்டும் கருதுபவராக இருப்பதில் அதிசயமில்லை. ஆனால், வயது வந்தவர்களும் இதே மனப்பான்மையோடு இருப்பது பொருந்தாது. "கேளுங்கள் கொடுக்கப்படும்" என்று ஆண்டவர் கூறியிருக்கிறார் என்பது மெய்யே. ஆயினும் கேட்பது மாத்திரமே செபமாக அமைந்துவிடக் கூடாது. அதுவும் "சுகம்," "செல்வம்" போன்ற இலௌகிக காரியங்களைக் கேட்கும்போது இறைவனது திருச்சித்தத்தை ஒட்டியே கேட்கவேண்டும். இந்த நல்ல காரியங்களைப் பெற்றுக்கொள்வது எமக்கு நன்மையாகவும் இருக்கலாம், தீமையாகவும் இருக்கலாம் என்பதை மறந்து விடலாகாது.

நாம் மனச் சமாதானத்தையும், நிம்மதியையும் இழக்காமலிருக்க வேண்டுமானால் இந்த உண்மையை கருத்திற் கொள்ளவே வேண்டும். நாம் கேட்பதையெல்லாம் கடவுள் கட்டாயம் தரவேண்டும் என்று எதிர்பார்த்தால் பெரும் ஏமாற்றமே அடைவோம். எம் நிலைமையை உள்ளது உள்ளவாறே அறியக்கூடியவர் கடவுள் ஒருவர் தான், தீங்கு விளைக்குமென அறிந்த எதையும் அவர் தமது மக்களுக்குக் கொடுக்கமாட்டார்.

எமது உலக வாழ்வின் பிரதான நோக்கம் ஆன்ம ஈடேற்றம் அடைவதுதான். ஆகவே, எமது செபங்களிலெல்லாம் ஆன்ம நலன்களையே நாம் விசேஷமாக வேண்டல் தகும். உலக நலன்களை கேட்கவேண்டி நேரும்போது "இறைவனது சித்தத்துக்கும் எமது ஆன்ம இரட்சணியத்துக்கும் அது உகந்ததாக இருந்தால்" அதை அருளும்படி கேட்பதுதான் முறையானது, வேறு விதமாக பிரார்த்திப்பது அறிவீனமாகும். அன்பும் கருணையும் நிறைந்த ஒரு தேவன் எமக்குப் பரலோக வாசலை பூட்டிவிடக் கூடிய ஒரு திறப்பை எம் கையில் தருவார் என்று எதிர்பார்க்க முடியாது.

நாம் இறைவனுக்கு ஊழியம் புரியும்போது அவர் உவகை அடைகிறார் என்பது உண்மை. ஆனால், நாம் செய்யும் எத்தனையோ நல்ல காரியங்கள் தீய அல்லது மட்டமான சுயநல நோக்கங்களால் பயனற்றுப் போகின்றன.

நோய், வறுமை முதலிய துன்பங்களைச் சகிக்கும் போது, நாம் நல்ல காரியங்களைச் செய்வதைவிட கூடிய பலனை அடையக் கூடும். ஏனெனில் இத்துன்பங்கள் எமது விருப்பத்தின்படியல்ல இறைவனது சித்தத்தின்படியே வருகின்றன. இறைவனிடமிருந்து வரும் அத்தகைய ஒரு சிறுவையை பொறுமையுடன் சகித்துக்கொள்வது ஆத்துமங்களை இரட்சிப்பதற்கு எவ்வளவோ உதவக்கூடும்.

## எமது பிரமாணிக்கத்தைக் காட்ட காலம் வந்துவிட்டது

ஐக்கிய அமெரிக்காவில் மிகப் பழமைவாய்ந்த பொதுநிலைக் கத். சங்கத்தின் அங்கத்தவரில் ஒருவரான பிரபல நியாயவாதி திரு. ஹனிபை என்பவர் அந்நாட்டு கத்தோலிக்கர்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சி ஊட்டியிருக்கின்றார். "தப்புப் பாதையிற்செல்லும் ஒருசில குருமாரும், பொதுநிலைக் கத்தோலிககரும் திருச்சபைக்குக் கணிக்கமுடியாத அளவிறுகுச செய்திருக்கும் தீமையை அந்நாட்டுப் பிரமாணிக்கமுள்ள கத்தோலிக்கர் மேலும் கைகட்டி,வாய்பொத்திப் பார்த்திருக்க முடியாது. கத்தோலிக்கர் யாவரும் உண்மையான விசுவாசத்துடன் நாம் யாவரும் ஒரே கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறத்தக்கதாக இருக்கவேண்டும. பாரம்பரியமாக நாம் விசுவசித்த சத்தியங்களைப் பார்ப்பவர் ஐயுறுவண்ணம், தெட்டத் தெளிவான முறையில் வெளியரங்கமாகக் காட்டிவைக்க முன்வரவேண்டும்" என்று அறைகூவி அழைக்கின்றார்,

# உலக சமாதான இலக்கு நழுவி விடுமா?

சென்றவாரம் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் தமது கோடை கால வாசஸ்தலத்தில் அளித்த வாரப்பேட்டியில் உலக சமாதான இலக்கு வழுவி விடும் நிலைமையில் இருப்பதாக மிகக்கவலையுடன் அறிவித்தார். .சமீபகாலத்தில் பொலிவியா தேசத்திலும், வடஅயர்லாந்திலும் ஏற்பட்டிருக்கும் குழப்ப நிலைகளை அவர் சுட்டிப் பேசாவிட்டாலும், அவற்றையும், ஏற்கனவே கவலை கொடுத்துவரும் தென் வியற்னும், மத்திய கிழக்கு வங்காளதேச நிலைமைகளையும் அவர் மனதில் கொண்டிருந்தார் எனக்குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதன்பின் வந்தசெய்திகளில் பாப்பரசர் வடஅயர்லாந்தின் நிலைமை திருந்துவதற்காகவும் அடக்கு முறையின் கொடுமை அகலவேண்டும் என்பதை விசேஷ கருத்தாகவும், கொண்டு செபிக்குமாறு கேட்டிருக்கிறார்.

### பீற்றர்பிள்ளை அடிகளாரின்
## பெயரில் ஒரு வீதி

இலங்கைப் பெரியார்களின் பெயர்களை கொழும்பு மாநகர வீதிகளுக்கு இடுவது இன்று சர்வ சகஜமாகி விட்டது. இதற்கு இணங்க, இலங்கைக் கல்விமான்களில ஈடுஎடுப்பில்லாதவராகிய காலஞ்சென்ற வண. பீற்றர்பிள்ளை சுவாமியாரின் பெயரைப் பொறெல்லா குறுக்குவீதிக்கு இடவேண்டுமென்று கொழும்பு மாநகர மேயர் கேட்கப்பட்டிருக்கின்றார். இவ்விஷயம் மேயரினால் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

### வங்காளதேச அகதிகளுக்கு உதவ
## மேலும் நிதிவேண்டும்

ஒரு மாதகாலத்தின் முன் வங்காள தேசத்திலிருந்து இந்தியாவுக்குள் அகதிகளாகச் சென்றிருந்த 4,00,0000 மக்களின் தொகை இன்று இரண்டு மடங்காகிவிட்டதனால், அன்று ஐக்கியதேச தர்மஸ்தாபனத்தினாலும், மறுதர்மஸ்தாபனங்களினாலும் அனுப்பப்பட்ட பண உதவிகளும் மறுபொருள் உதவிகளும் போதியதாகவில்லையென்றும் மேலும் உதவிகள் உடனடியாக அனுப்பப்படாவிடில் பசிபட்டினியாலும் வியாதிபிணிகளினாலும் பல்லாயிரமக்கள் மடிய நேரிடுமென்றும் இந்தியாவில் அகதிகள் மத்தியில் பணியாற்றும் ஐக்கியநாட்டு ஸ்தாபன உத்தியோகஸ்தர்கள் அறிவித்திருக்கின்றனர். மேலும், அங்குள்ள கிறிஸ்தவ தர்மஸ்தாபன அவதானிகள் அனுப்பியிருக்கும் தகவலகள் பிணியினால் மடியும் சிறுவர் சிறுமிகளின் தொகை கணக்கிட்டுக்கொள்ள முடியாத நிலைமையை அடைந்துவிட்டதெனக் கூறுகின்றன.

### கொழும்பு கத்தோலிக்க கல்லூரிகளின்
## புதிய தலைவர்கள்

கொழும்புமாநகரின் சஞ். சூசையப்பர் கல்லூரியின் புதிய தலைவராக வண. மேர்வின் வீரக்கொடி சுவாமியார் நியமிக்கப்பட்டிருக்கிறார். வண பீற்றர்பிள்ளைச் சுவாமியாரின பின் அக்கல்லூரித் தலைவராகக் கடமையாற்றிவந்த டொன்பீற்றர் அடிகளார் கொழும்பு அக்குவைனஸ் ஸ்தாபனத்தின் தலைவரானார். சென்ற சில வருடங்களாக பம்பலப்பிட்டிய சென் பீற்றேர்ஸ் கல்லூரியின் தலைவராகக் கடமையாற்றிவந்த மேர்வின் வீரக்கொடி அடிகளாருக்குப் பதிலாக வணக்கத்துக்குரிய தியடோர் பீரிஸ் சுவாமியவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார், இவர் பல வருடங்களாக கழுத்துறை திருசிலுவைக் கல்லூரி அதிபராயிருந்தவர். இவரினிடத்தில் ரிமதி பீரிஸ் சுவாமியார் தலைவராகிறார். ரிமதி பீரிஸ் சுவாமியார் அமெரிக்க சர்வகலாசாலைகளில் கைத்தொழிற் கலைகளிலும் பட்டம் பெற்றவர்,

## சேனை பொன்விழாப் பொருட்காட்சி

உலகில் மரியாயின்சேனை ஆரம்பமாகி 50ஆண்டுகளின் நிறைவையொட்டிய பொன்விழா கொண்டாட்டங்களின் விசேட சிறப்பு நிகழ்ச்சியாக ஒரு பொருட்காட்சி ஐப்பசி 17-ம், 18-ம் தேதிகளில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற இருக்கின்றது. இப் பொருட்காட்சியில் துறவற, இல்லற அப்போஸ்தல அழைத்தல் பற்றிய அம்சம் பிரதான இடம்பெறுகிறது. யாழ். மேற்றிராசனம் அடங்கலுமுள்ள மரியாயின் சேனையாளர் பங்குபற்றுகிறார்கள்.

## பூசை வழிகாட்டி

### புரட்டாதி — 1971

19. ஞாயிறு — ஆண்டின் 25-ம் ஞாயிறு [ப]
1-ம் வாசகம்: ஆமோ, 8: 4—7.
2-ம் வாசகம்: 1திமோ. 2: 1—8.
சுவிசேஷம்: லூக். 16: 1—13.

20. திங்கள் — நாள் பூசை [ப]
வாசகம்: எஸ்தி. 1: 1—6.
சுவிசேஷம்: லூக். 8: 16—18.

21. செவ்வாய் — புனித மத்தேயு [சி]
வாசகம்: எபேசி. 4: 1—7, 11—13.
சுவிசேஷம்: மத். 9: 9—13.

22. புதன் — நாள் பூசை [ப]
வாசகம்: எஸ்தி. 9: 5—9.
சுவிசேஷம்: லூக். 9: 1—6.

23. வியாழன் — நாள் பூசை [ப]
வாசகம்: அக்கே. 1: 1—8.
சுவிசேஷம்: லூக். 9: 7—9.

24. வெள்ளி — நாள் பூசை [ப]
வாசகம்: அக்கே. 2: 1—10.
சுவிசேஷம்: லூக். 9: 18—22.

25. சனி — நாள் பூசை [ப]
வாசகம்: சக்கா. 2: 1—5, 10—11.
சுவிசேஷம்: லூக். 9: 43—45.

### கிறீஸ்தவ சபைகளின் ஒத்துழைப்பு அவசியம்

தென் ஆபிரிக்காவிலும், கிழக்கு ஆபிரிக்காவிலும் தொண்டாற்றிவரும் அங்கிளிக்கன் கிறிஸ்தவசபை அப்பகுதிகளில் சிக்கலாயிருக்கும் சில விவாகபந்தன பிரச்சினைகளில் ஆலோசனைகூற ஒரு கத்தோலிக்க குருவானவரின் உதவியை நாடியிருக்கின்றது. அக்குருவானவர் அட்றியன் ஹேஸ்ரிங்ஸ் அடிகளாரே. ஆபிரிக்கதேசங்களில் இன்று விவாகரத்துக்களும், பலமனைவிமாருடன் வாழும் வழக்கமும் முன்னிலும் பல்கிவளர்ந்திருப்பதினால் கிறீஸ்தவசபைகள் ஒருபொதுக் கட்டுப்பாட்டைத் தேடுகின்றன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 ஆம் இலக்க 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் வரு புரட்டாசி மாதம் 18-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: 'கத்தலிக்பிறஸ்." யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1876.